**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 27.06.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆனி மாதம் 14ஆம் நாள் **27.06.2019 வியாழக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள் 20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு

அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் <u>தேர்வுநிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class IV கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 2163 /2017/சி1)

**<u>தீர்மான எண்.981 அனுமதிக்கப்பட்டது</u>**

## <u>பொருள் 02</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2018-19-ம் ஆண்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் 1 ) தேனி புதிய பேருந்து நிலையம் சாலை ( பைப்பாஸ் ரோடு ஜங்சன் பெரியகுளம் ரோடு மற்றும் மதுரை ரோடு இணையும் இடம் ), 2 ) தேனி நகராட்சி எரிவாயு தகன மேடை வளாகத்திற்கு ஆகிய இரண்டு இடங்களில் 9 மீட்டர் மினி ஹைமாஸ்ட் லைட் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் நாளிதலில் மாவட்ட அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ் நாளிதழ் | தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை வெளியீட்டு ஆணை எண்.66 / ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2019, நாள்.03.06.2019 | 27600 |

மேற்கண்ட தொகை ரூ.27600/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.982 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## <u>பொருள் 03</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60 K 4480 - க்கு உரிய வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதியதாக இன்னும் ஒரு வருடத்திற்கு வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 170000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### <u>அலுவலககுறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1461/2019எச்1)

**<u>தீர்மான எண்.983 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60 L 6411- க்கு உரிய வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதியதாக இன்னும் ஒரு வருடத்திற்கு வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.160000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்ண்1462/2019/எச்1)**

**<u>தீர்மான எண்.984 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60 L 6394 - க்கு உரிய வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதியதாக இன்னும் ஒரு வருடத்திற்கு வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 160000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1463/2019/எச்1)**

**<u>தீர்மான எண்.985 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## <u>பொருள் 06</u>:

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN 60 L 6411 - க்கு வாகன தகதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **26.06.2019** ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|
| 01 | ABT Industries Ltd, Theni | 154580/– |
| 02 | ஸ்ரீ அம்மன் லேத்& வெல்டிங் ஒர்க்ஸ், தேனி | 163666/– |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ABT Industries Ltd, Theni நிறுவனத்தின் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1462/2019/எச்1)**

**<u>தீர்மான எண்.986 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## பொருள் 07:

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN 60 L 6394 - க்கு வாகன தகதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **26.06.2019** ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|
| 01 | ABT Industries Ltd, Theni | **154698/–** |
| 02 | ஸ்ரீ அம்மன் லேத்& வெல்டிங் ஒர்க்ஸ், தேனி | **162604/–** |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ABT Industries Ltd, Theni நிறுவனத்தின் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1463/2019/எச்1)

**<u>தீர்மான எண்.987 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## பொருள் 08:

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN 60 K 4480 - க்கு வாகன தகதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **26.06.2019** ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|
| 01 | ABT Industries Ltd, Theni | **168210/–** |
| 02 | ஸ்ரீ அம்மன் லேத்& வெல்டிங் ஒர்க்ஸ், தேனி | **208270/–** |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ABT Industries Ltd, Theni நிறுவனத்தின் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1461/2019/எச்1)

**<u>தீர்மான எண்.988 1, 2. அனுமதிக்கப்பட்டது</u>**

## பொருள் 09:

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டின் கீழ் உள்ள கழிவு நீர் குழாய் லையன்கள் ( Sewer Lines ), ஆய்வுத்தொட்டிகள் ( Chambers ), கழிவுநீர் உந்து நிலையங்கள் ( Lift Stations ), மற்றும் பிரதான உந்து நிலையம் ( Main Pumping Station), ஆகியவைகளை தனியார் மூலம் ஓர் ஆண்டுக்கான மதிப்பீடு தொகை ரூ. **32.23** இலட்சம் வீதம் **3** ஆண்டுகளுக்கு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். **23656/2013**/DO1 நாள். **06.02.2018**ன்படி மேற்காணும் பணிக்கு ஒப்பந்த விதிகளின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணியினை **1** ஆண்டிற்கு மட்டும் தனியார் மூலம் செய்வதற்கு அனுமதி வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய V.V.V.CONSTRUCTIONS - Chennai - என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை V.V.V.CONSTRUCTIONS - Chennai என்ற நிறுவனம் செய்வதற்கு 27.04.2018-ம் தேதியன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான உரிமகாலம் 26.04.2019-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டதால், மேலும் ஓர் ஆண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் வழங்கும் காலக்கட்டத்தில் 2019 - பாராளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் மன்றத்தின் ஒப்புதல் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே, இப்பணியினை மேலும் ஓர் ஆண்டுக்கு V.V.V.CONSTRUCTIONS - Chennai - என்ற நிறுவனத்திற்கு சென்ற ஆண்டின் ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ. 33.82 /– இலட்சத்தில் தற்போது மேலும் 5% உயர்த்தி V.V.V.CONSTRUCTIONS - Chennai – என்ற நிறுவனமே செய்வதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3354/2018/இ3)

**<u>தீர்மான எண்.989 அனுமதிக்கப்பட்டது</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி